# கவிதாஞ்சலி

**தோற்றம்**

1936
-
01
-
03



**மறைவு**

2010
-
01
-
15

(ஈழத்தில் பிறந்து இங்கிலாந்தில் வாழ்ந்து அமரரான
ஓய்வுபெற்ற ஆசிரியை
திருமதி. **புவனேஸ்வரி பாக்கியராசா** அவர்கள்)

ஈழத் தெற்கில் இலங்கு மூராய்ச்
சூழும் வளத்தைச் சூடித் திகழும்
காரை தீவின் காணுங் குடியில்
பேரின் குடும்பப் பிள்ளை புவனம்
அறிவில் பண்பின் அருமைக் குணத்துச்
செறிவில் பெண்மைச் சிறப்புக் கண்டார்.
ஆய்வுத் தரத்தின் ஆசிரியப் பணியின்
தோய்வில் துலங்கத் துணையாய் மேலோன்
பாக்கிய ராசா பல்கலை யாளன்
ஆக்கும் வாழ்வின் அருமைச் சேய்கள்
தயாவும் நிதியும் தரத்தி னிருவர்
தியாகச் செழுமை திரட்டுங் குடும்பம்
காணப் பொறுக்காக் காலன் பிடியால்
பேணுந் தலைவன் பிரியப் புவனம்
வாடித் துடித்தார் வருட மோட
நாடிச் சீமை நாட்டில் வாழும்
மக்கள் அழைப்பில் மனமு மாறப்
பக்கத் துணையில் பலதாய் வருடம்
நீளா வாறு நினையாத் தருணம்
ஆளு மிறையின் அடியைச் சேர்ந்தார்.
துயர்கள் மாறத் தூயவ ரான்மா
அயர்வில் சாந்தி அடையத் தொழுவோம்.

மட்டக்களப்பு
2010.01.20

சமர்ப்பணம்
பொன்-தவநாயகம்